மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தை வைத்துதான் அரசு ஆவன செய்து வருகின்றது. அதோடு மட்டுமல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர், தகுதி வாய்ந்த அந்த மனுக்கள் வருகின்ற சமயத்தில், அவைகளைப் பரிசீலனை செய்து அவற்றை அரசுக்கு அனுப்பினால், அதைப்பற்றி அரசு பரிசீலித்து கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யும்.

திரு. ஜீ. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் தொகை தருகிறபோது, இதைப்பற்றித் தெரிந்தவர்கள் எல்லாம் முதலிலே மனுப்போட்டுவிட்டார்கள். ஆனால் பல கிராமங்களிலே அங்கே உள்ள கிராமசேவக்குகள் சொல்வது கிடையாது.

அந்தப் பகுதியிலே இருக்கின்ற மற்றவர்களும் பொதுமக்களும் எடுத்துச் சொல்லாமல், மலைப் பகுதியிலே வாழ்கின்ற அல்லது ஆந்திரப் பகுதி ஓரமாக நம்முடைய தமிழகப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு எல்லாம் இந்தத் திட்டம் தெரியாமல் உண்மையிலேயே வருந்தத்தக்கதாக உள்ளது. முதியோர்களுக்கும் இயலாதவர்களுக்கும் இந்தத் திட்டம் பலன் அளிக்கவில்லை. அவர்கள் மனுப்போட்டால் இதே போன்று 250 பேர்களிலே யாராவது இறந்து போனால் சேர்த்துக் கொள்கிறோம் என்கிறார்கள். எனவே உண்மையிலேயே ஜெனூயன் கேஸ்களாக இருந்தால் அவைகளுக்கு விதிவிலக்குக் கொடுத்து உதவித் தொகை அளிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அதைப்பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் ஆவன செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் தகுதி வாய்ந்தவர்களுக்குக் கண்டிப்பாகக் கொடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

உதவித் தொகை பெறும் ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர் எண்ணிக்கை.

* வினா எண் 60—திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–1982-ல் அரசால் வழங்கப்பட்ட ஆதரவற்ற விவசாய தொழிலாளர் உதவித் தொகை பெற்றவர்கள் எண்ணிக்கை என்ன ?

(ஆ) வழங்கப்பட்ட தொகை எவ்வளவு ?

1982 செப்டம்பர் 10]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 31—3—1982 முடிய 25,072 ஆதர வற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்கப் பட்டது.

(ஆ) இதற்கென 1981—82—ல் ரூ. 18,17,672.45 வழங்கப் பட்டது.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர் களுக்கு 25,072 பேர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட வாரியாக வழங்கப்பட்டவர்கள் விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13—3—81 முதல் இந்தத் திட்டம் செயல் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக 30 ஆயிரம் ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒய்வு ஊதியம் வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது. இதில் 31—3—82 முடிய 25,072 பேர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வி, மாவட்ட வாரியாக வேண்டுமென்றுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாவட்ட வாரியாக வைக்க வேண்டுமென்றால் தனி அறிக்கை வைக்கவேண்டியதுதான். எதைப்பற்றியாவது குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.

திரு. இரா. கருப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, 30 ஆயிரம் பேர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 25,072 பேர் களுக்குத்தான் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். மீதமுள்ளவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை அரசு தரப்பிலே உள்ளது. மற்றும், இந்த விவசாயத் தொழிலாளர்கள் சக்தி இழந்து வலுவிழந்து, வயோதிக நிலையில் இருக்கின்ற அனைத்து விவசாயத் தொழிலாளர்களுக்கும் இந்த திட்டத்தின்படி அந்த உதவித் தொகை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னமேயே பதிலில் சொல்லியிருக் கிறேன். ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு கண்டிப்பாக உதவித் தொகை வழங்கப்படும்.

திரு. என் ஏ பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகை வழங்குவதில் அரசுத்தரப்பி லிருந்து தகுதி வாய்ந்த என்ற அந்த வார்த்தைக்கு என்ன பொருள்கள் அடங்கும், என்ன கருத்து என்பதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்களா ? எந்த அடிப்படையிலே அந்த தகுதி நிச்சயிக்கப்படுகிறது ? விண்ணப்பித்துள்ள மனுக்கள் அனைத்திலும், எத்தனை தகுதி அடிப்படையில் முடிவு எடுத்து இருக்கிறீர்கள். தகுதி என்பதை மட்டும் தெளிவாகச் சொன்னால் உதவி கோரி விண்ணப்பம் அனுப்புகிறபோது தெளிவாகப் புரிந்து கொள்ள உதவிகரமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதை அறிவிப்பார்களா என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஆதரவற்றவர்களாக இருக்க வேண்டும். ஏழைகளாக இருக்க வேண்டும் ; உழைக்க முடியாதவர்களாக இருக்க வேண்டும் ; 60 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

குறிப்பு : உடுக்குறியிடாத வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் இணைப்பில் காண்க.

3. அறிக்கை அளித்தல்.

(அ) விதி 107 (1)-ன் கீழ் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 25–3–1982 ஆம் தேதியன்று, 650 ஆம் எண் வினாவின் கீழ் எழுப்பப்பெற்ற துணை வினாவிற்கு அளிக்கப்பெற்ற விடைக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற பேரவை விதி 107-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, 25–3–1982ம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உடுக்குறியிட்ட வினா எண் 650 (பழைய எண். 9209) தொடர்பாக நடைபெற்ற விவாவத்தின்போது, உறுப்பினர் திரு. எம். சின்னசாமி, அவர்கள் கீழ்க்கண்ட துணை வினாவினைக் கேட்டிருந்தார்: